TAMIL NADU LEGISLATURE LIBRARY
31 JUL 1973
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1973 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

இலவச கண் சிகிச்சை முகாம்கள்

* 539 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 ஜுன் திங்களில், தமிழ்நாடு முழுவதும் இலவச கண் சிகிச்சை முகாம்கள் துவங்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இதற்கான விவர அறிக்கை ஒன்று (*) அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. T. K. THANGAMANI: There is a short notice question.

MR. DEPUTY SPEAKER: The concerned Minister is not present.

* 540 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்குப் விடையளிப்பாரா —

கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் டிசம்பர் 1972 முடிய பயனடைந்தோர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டிசம்பர் 1972 முடிய 1 42,269 பேர்கள் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளார்கள்.

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின் மூலமாக இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் பயன் பெற்று வருகிறார்கள். ஏற்கெனவே கண் சிகிச்சை முகாம்களில் அறுவை

---

* 273–276-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.